**கோறளைப்பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

-----------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 01 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கோரளைப்பற்று பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட போட்டோ பிரதி இயந்திரத்திற்காகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 135,000 மீண்டுவரும் செலவின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

பதவியை விட்டுச் சென்ற மற்றும் இளைப்பாறிய 24 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடனில் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 593,967 பத்து வருடங்களுக்கு மேலாக நிலுவையாக காணப்பட்ட போதிலும் அதனை உரிய நபர்களிடமிருந்து அல்லது அவர்களின் பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுவருகின்றது.

1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் விதி 5(12) | பணம், களஞ்சியப்பொருட்கள் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை |

| | |
|---|---|
| (ஆ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | பெறப்பட்டிருக்கவில்லை. கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் என்பவற்றை பதிவதற்காக தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு
----------------

2.1 நிதி விளைவுகள்
--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுக்களின்படி 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 12,468,433 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 10,734,838 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 1,733,595 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

3 செயற்பாட்டு மீளாய்வு
--------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்
------------------------------

2011 இல் ஆறு மாத காலம் சபையில் பணியாற்றிய 14 ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதியத்துக்கான பங்களிப்பு பணம் ரூபா 325,750 தொகையை உரிய காலத்தில் செலுத்தாமையினால் அவை மீதான தண்டப்பணம் ரூபா 53,927 தொகையையும் சேர்த்து ரூபா 379,677 தொகையை சபை செலுத்த வேண்டியுள்ளது.

4 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்
------------------------------------------------

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான முகாமைத்துவம்
(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்